# உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில் 'ஒக்டோபர் – தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்' இனை நடைமுறைப்படுத்தல்.

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. 2020 ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேட செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பொது நூலகங்களிடமும் கோரியுள்ளது. 2018ஆம் ஆண்டு முதல் தேசிய வாசிப்பு மாதத்திற்கென குறிப்பிட்டதொரு தொனிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை நடைமுறைப்படுத்தி வருகின்றது. உலகம் முழுவதும் பரவியுள்ள கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு பொது மக்களை விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஊடாக தன்னிறைவை உருவாக்கும் நோக்கில் **"நூலொன்றை வாசிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்"** என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக இவ் வருட தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு முன்மொழியப்பட்ட செயற்திட்டங்கள் 2020.08.01 முதல் 2021.01.31 வரை செயல்படுத்தப்படல் வேண்டும்.

## 02. செயற்திட்டக் குழு

இந் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பு செய்வதற்காக வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்றினை நியமிப்பது உசிதமானது. தற்போது நூலகத்தில் நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் அக் குழுவின் ஊடாக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதன்பொருட்டு பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- நிறுவனத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் – குழுத் தலைவர்
- மா நகர ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர் – உப தலைவர்
- நூலகர் / பொறுப்பதிகாரி– குழுச் செயலாளர்
- சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பொது சுகாதார பரிசோதகர்
- விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பிரதேச மருத்துவனையின் தலைவர் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர்
- வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர்
- பிரதேச செயலகத்தின் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

## 03. நடைமுறைப்படுத்தக் கூடிய விசேட செயற்திட்டங்கள்

- தொனிப்பொருளுடன் தொடர்புடைய நூல்களை நூலகத்திலிருந்து இனங்காணல். உதாரணம் உலகப்போர்கள் / தொற்றுநோய்களின் பின்னர் பல்வேறு நாடுகளின் வளர்ச்சி குறித்த எழுதப்பட்ட படைப்புக்கள் ( சுயசரிதை மகேந்திர டாடா, லீ குவான் யூ, மஹாதீர் முகமது, ஆன் பிராங்க்)
- அந் நூல்களின் சேர்க்கைகளை விசேட ஒழுங்மைப்புக்களை மேற்கொண்டு வருடம் முழுவதும் விளம்பரப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்தல்.
- சுற்றுச்சூழல், விவசாயம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவன அமைப்புகளின் பட்டியல்களை தொகுத்தல். உதாரணம் : தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) / கண்டுபிடிப்பாளர்கள் சங்கம்.
- தொனிப்பொருளுக்கு ஏற்ற நூல்கள் நூலகத்தில் காணப்படாவிடின் அவற்றை உள்நாட்டுகளிலோ அல்லது வெளிநாடுகளிலோ கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இப்பிரதேசத்தில் காணப்படும் ஆயுர்வேத திணைக்களங்கள், பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் பற்றிய தகவல் ஆவணங்களை திரட்டி பட்டியல்களை தயாரித்து அவற்றை அப்பிரதேச மக்களுக்கு அறியப்படுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பல்வேறுப்பட்ட நோய்களுக்கான தற்பாதுகாப்பு முறைகள் மற்றும் பல்வேறுப்பட்ட நோய்களுக்கான மருத்துவ முறைகள், கை வைத்தியம், சுதேச மருத்துவம் பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள் / கட்டுரைகளைத் தொகுத்து அவற்றை சமூக ஊடகங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்தல்.
- உணவு பாதுகாப்பிற்காக வீட்டு நுகர்விற்கு பொருத்தமான பயிர்கள் மற்றும் தாவரங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதுடன் அப் பயிர்களை வளர்ப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல். உதாரணம் : பயிர் சாகுபடி செய்யும் முறை / பூச்சி கட்டுப்பாடு முறை.
- வாசகர் சமூகத்தில் ஒவ்வொரு வாசகர்களின் வீடுகளிலும் (நகர்ப்புறமாக இருந்தால் தொட்டிகளில்) வீட்டுத்தோட்டங்களை செய்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் வீட்டுத்தோட்டப் போட்டிகளை ஒழுங்மைத்தல் (நூலகத்திற்கு அன்மையில் ஒரு மாதிரி வீட்டுத் தோட்டத்தை அமைத்தல்).
- அதிகப்படியான பயிர்களை விற்பனை செய்வதற்கு தேவையான சந்தை வசதிகளை நூலகத்திற்கு அன்மையில் ஏற்பாடு செய்துக் கொடுத்தல்.
- இணையம் மற்றும் சமூகஊடகங்கள் மூலம் மேற்கண்ட திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் தகவல்களை விளம்பரப்படுத்தல்.
- உள்நாட்டுக் கைத்தொழில்கள், பலதரப்பட்ட சுய கைத்தொழில்கள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டல். (உதாரணம் : ஓலை / தும்பு / பிரம்பு / காலாவதியாகாத தயாரிக்கப்பட்ட உணவு வகைகள்)
- இறக்குமதி செய்யப்பட்ட, உள்நாட்டில் வளர்க்கக்கூடிய பொருளாதாரப் பயிர்களின் சாகுபடி தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- பசுமை நூலக எண்ணக்கரு தொடர்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்த கருத்தரங்குகள்/ கலந்துரையாடல்கள் / விரிவுரைகளை ஏற்பாடு செய்தல்.
- வாசகர்களின் ஆக்கப்பூர்வத் திறமையை எடுத்துக் காட்டும் படைப்புக்களை உள்ளடக்கிய சஞ்சிகைகள் , சுவர் செய்தித்தாள்ளை வெளியிடுதல்.
- தொனிப்பொருளுடன் தொடர்பான பல்வேறுப்பட்ட போட்டிகளை நடாத்துதல். (கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி)
- தொனிப்பொருளுடன் தொடர்பான சுவரொட்டிகளைத் தயாரித்தல்.
- புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல்.
- இலவச நூலக அங்கத்துவம் வழங்குதல்.
- நூலகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- இப்பிரதேசத்தில் சிறந்த வாசகரை தெரிவு செய்தல்.
- நடமாடும் நூலக சேவையினை நடாத்துதல்.

- சுகாதார நடைமுறைகளை பின்பற்றிச் சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த கதைசொல்லும் நேரங்கள், சிறுவர் திரைப்படங்கள் மற்றும் சிறுவர் நாடகங்கள் போன்ற பல்வேறுபட்ட பொழுதுப்போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பிரதேசத்தில் உள்ள ஏனைய நூலகங்களுடன் இணைந்து வாசிப்பினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூராட்சி பிரதேசத்திற்குட்பட்ட சகல வீடுகளுக்கும் ஒரு நூலகம் என்ற எண்ணக்கருவிற்கமைவாக குறைந்தது ஒரு புத்தக அலுமாரியினைக் கொண்ட நூலகமொன்றினையாவது ஆரம்பித்தல். இதன்பொருட்டு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நூலக முகநூல் (Face Book) பக்கத்துடன் இதுவரை இணையாத வாசகர்களை அடையாளங் கண்டு அவர்ளை முகநூலுடன் இணைத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் முகநூலில் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல்.
- நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறுப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் வெளியிடுதல்.
- உள்ளூரில் புதிய கண்டுப்பிடிப்புக்கள், புதியக் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைக் கொண்டு வரும் சிறுவர்கள் மற்றும் பொதுமக்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- சிறுவர் வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறச் செய்தல்.
- பிரதேச வைத்தியசாலையுடன் இணைந்து வாசித்தல் மற்றும் தகவல்களை விளம்பரப்படுத்துவதற்கு நடவடிக்கைளை முன்னெடுத்தல்.

### 04. செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கோவிட் –19 (COVID-19) சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் அவை தொடர்பான அறிவுறுத்தல்களை கீழே உள்ள வலைத்தள இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். http://www.health.gov.lk/moh_final/english/article_read_more.php?id=885

### 05. நிதி

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. தேவைப்படும் நிதியினை குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலமும் அல்லது நூலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

### 06. அறிக்கை தாயரித்தல்.

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறைமை சார்ந்த அறிக்கையொன்றினை ( அச்சு / இருவெட்டு மூலம் தயாரிக்கப்பட்ட) குறித்த உள்ளூராட்சி நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் 2021 **பெப்ரவரி 28** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு** 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- தேசிய வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்ற நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய வாசிப்பு ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட

நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அதனால் நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்ட ஏனைய சமூக சேவைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை அதில் சேர்த்தல் கூடாது. உதாரணம் : சிரமதானம் /அன்னதானம் / இரத்த தானம் வழங்குதல் என்பவை.

- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்கள் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு காரணிகளுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

தேசிய வாசிப்பு மாதத்தின் (2020) வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2021 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படும். **மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டங்களில் இடம்பெறுவதனால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் வெவ்வேறாக தங்களது அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.** இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும் நூலகங்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் மதிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் விருதுகளுக்கு உரித்துடைய நூலகங்கள் எவை என தீர்மானிக்கப்படும்.

சொனால குணவர்த்தன
தலைவர்

Sonala Gunawardana
Chairman
National Library & Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 011 2698847

இணையத்தளம் – www.natlib.lk